بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/01/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**கலப்பற்ற தன்மை மற்றும் நன்றி உணர்வின் மொத்த உருவமாகத் திகழ்ந்த சில பத்ர் சஹாபிகளின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

சஹாபிகளின் நற்குறிப்பிலிருந்து இன்று கொஞ்சம் எடுத்துரைப்பேன். **முதல் குறிப்பு, ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்தல் முன்ஸிர் (ரலி) அவர்களைப் பற்றியதாகும்.** இவர்களைக் குறித்து இன்னும் சில அறிவிப்புகள் கிடைத்துள்ளன.

அல்லாமா இப்னு அப்துல் பர் அவர்கள் தமது **'அல் இஸ்தீஆப்'** எனும் நூலில் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள்,

وَاٰخَرُوۡنَ اعۡتَرَفُوۡا بِذُنُوۡبِہِمۡ خَلَطُوۡا عَمَلًا صَالِحًا وَّاٰخَرَ سَیِّئًا ؕ

"தங்கள் பாவச் செயல்களை ஒப்புக் கொண்ட வேறு சிலரும் உள்ளனர். இவர்கள் நல்ல செயல்களையும் தீய செயல்களையும் கலந்துவிட்டனர்." **(திருக்குர்ஆன் 9:102)** எனும் வசனத்தைக் குறித்து கூறும்போது, இந்த வசனம் அபூ லுபாபா (ரலி) மற்றும் 7,8 நபர்களைக் குறித்து இறங்கியது. இவர்கள் தபூக் போரை விட்டு பின்தங்கி விட்டிருந்தனர். பிறகு, அவர்கள் இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்டனர். மேலும், தம்மை தூணோடு கட்டி வைத்துக் கொண்டனர். அவர்களின் நற்செயல் தவ்பாவாக இருந்தது. அவர்களின் தீய செயல் போரிலிருந்து பின்தங்கியதாக இருந்தது என்று கூறினார்கள்.

முஜம்மஃ பின் ஜாரியா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உனைஸ் பின் கதாதா (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு அவர்களின் மனைவியாகிய ஹஸ்ரத் கன்ஸா பின்த் கிஸாம் அவர்களை அவர்களின் தந்தையார் முஸைனா கோத்திரத்தைச் சார்ந்த ஒருவருடன் திருமணம் செய்து வைத்தார்கள். அதை ஹஸ்ரத் கன்ஸா பின்த் கிஸாம் அவர்கள் விரும்பியிருக்கவில்லை. ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் நிக்காஹ்வை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கன்ஸா அவர்களைத்

திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் மூலமாக ஹஸ்ரத் சாயிப் பின் அபீ லுபாபா (ரலி) பிறந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அபீ யஸீது கூறுகிறார்கள்: நாங்கள் அபூ லுபாபா (ரலி) அவர்களுடன் அவர்களின் வீட்டிற்கு சென்றோம். அங்கு ஒரு நபர் பழைய நைந்து போன உடை அணிந்து அமர்ந்திருந்தார். "எவர் அழகிய குரலில் குர்ஆன் ஓதுவதில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவர் கிடையாது" என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்று அவர் கூறினார்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அபூ ஸியாஹ் பின் ஸாபித் பின் நுஃமான் (ரலி) அவர்களுடையதாகும்.** ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அவர்கள் பத்ர் போருக்கு செல்லும்போது கணுக்காலில் கல்லின் முனை குத்தியதால் அவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. ஆகவே, அவர்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கான பங்கை வைத்தார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அன்ஸா (ரலி) அவர்களுடையதாகும்.** இமாம் ஸுஹ்ரி அறிவிக்கிறார்கள்: லுஹர் தொழுகைக்குப் பிறகு சந்திக்க வருபவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சந்திக்க அனுமதி வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஹஸ்ரத் அன்ஸா (ரலி) அவர்கள் இந்த அனுமதியை வாங்கிக் கொடுப்பார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் மர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி) அவர்களுடையதாகும்.** இம்ரான் பின் மன்னாஹ் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்களும் அவர்களின் மகன் ஹஸ்ரத் மர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி) அவர்களும் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தபோது அவ்விருவரும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹதம் (ரலி) அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

முஹம்மது பின் உமர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி) அவர்கள் உஹது போரிலும் பங்கேற்றார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) கன்னாஸ் பின் அல் ஹுஸைனீ ஃகணவி அவர்களுடையதாகும்.** ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) 30 ஒட்டகப் படை வீரர்களைக் கொண்ட முஹாஜிர்களின் ஒரு படைப்பிரிவைத் தம் தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் தலைமையில் மதீனாவின் கிழக்குப் பகுதியான ஸய்ஃபுல் பஹ்ரின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். அங்கு மக்காவின் பெரும் தலைவனான அபூ ஜஹ்ல் மற்றும் அவனுடைய 300 வீரர்களைக் கொண்ட படையை எதிர்கொள்ள நேர்ந்தது. இரு படைகளும் போருக்காக அணிவகுத்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியின் தலைவரான மஜ்தீ பின் அம்ர் அல் ஜஹ்னீ என்பவர் இரு பிரிவினருக்கும் இடையில் வந்து சமரசம் செய்து வைத்தார். இதனால் போர் நடக்கவில்லை. இப்போர், ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் போர் என்ற பெயரில் பிரபல்யம் ஆகும். ஹஸ்ரத் அபூ

மர்ஸத் (ரலி) அவர்களும் இந்த படைப் பிரிவில் பங்கு பெற்றிருந்தார்கள். அறிவிப்பில் இவ்வாறு பிரபல்யமாக அறியப்படுவதென்னவென்றால், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் முதல் கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக கட்டினார்கள். மேலும், இந்த படைப்பிரிவில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் கொடியை ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்கள் பிடித்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் வயதையொத்தவராகவும் அவர்களின் தோழராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) மற்றும் அவர்களின் மகன் ஹஸ்ரத் மர்ஸத் (ரலி) ஆகிய இருவருக்கும் பத்ர் போரில் பங்கு பெறும் நல்வாய்ப்பு கிடைத்தது.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் பின் அம்ர் (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்கள், அன்ஸாருடைய கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ அதீ பின் நஜ்ஜாரைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மக்கா வெற்றியின் போதும், ஹுனைன் போரின் போதும் அன்ஸாருடைய பனூ மாஸின் எனும் கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்களிடம் இருந்தது. ஹிஜ்ரி 13 இல், சிலரைப் பொருத்தவரை ஹிஜ்ரி 14 இன் துவக்கத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் கால கட்டத்தில் முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையே ஜிஸ்ர் போர் நடைபெற்றது. இந்த போரில் 2000 ஈரானியர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டனர். சில அறிவிப்புகளின் அடிப்படையில், 6000 ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். அதே போன்று சிலரைப் பொருத்தவரை, 1800 அல்லது 4000 முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். அந்த ஷஹீதுகளில் ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் முஜஸ்ஸர் பின் ஸியாது (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் முஜஸ்ஸர் பின் ஸியாது (ரலி) அவர்கள் அறியாமைக் காலத்தில் ஸுவைது பின் ஸாமித் -ஐ கொன்று விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் முஜஸ்ஸர் (ரலி) அவர்களும், ஹாரிஸ் பின் ஸுவைது அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால், ஹாரிஸ் பின் ஸுவைது தன் தந்தையின் கொலைக்குப் பழிவாங்க (தக்க தருணத்தைத்) தேடிக்கொண்டிருந்தார். உஹது போரில் குறைஷியர்கள் திரும்பி வந்து முஸ்லிம்களின் மீது தாக்குதல் தொடுத்த போது, ஹாரிஸ் பின் ஸுவைது ஹஸ்ரத் முஜஸ்ஸர் (ரலி) அவர்களின் கழுத்தில் பின்புறமிருந்து தாக்கி அன்னாரை ஷஹீதாக்கி விட்டார். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஹாரிஸ் பின் ஸுவைது ஹஸ்ரத் முஜஸ்ஸர் (ரலி) அவர்களை ஏமாற்றி கொலை செய்து விட்டார் என்று கூறி, ஹஸ்ரத் முஜஸ்ஸர் (ரலி) அவர்களுக்கு பதிலாக தாங்கள் ஹாரிஸைக் கொன்று விடுங்கள் எனக் கட்டளையிட்டார்கள். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க ஹஸ்ரத் உவைம் பின் ஸாயிதா (ரலி) அவர்கள் குபா பள்ளிவாசலின் கதவில் வைத்து ஹாரிஸ் பின் ஸுவைதைக் கொன்று விட்டார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் ரிஃபாஆ பின் ராஃபிஃ பின் மாலிக் பின் அஜ்லான் (ரலி) அவர்களுடையதாகும்.** இவர்கள் தம் சிற்றன்னையின் மகனான முஆஸ் பின் அஃப்ரா (ரலி) அவர்களுடன் மக்கா சென்றடைந்தார்கள். ஸனியா மலையிலிருந்து கீழே இறங்கும்போது ஒரு நபரைக் கண்டார்கள். அந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாக இருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அன்னாரை அடையாளம் காண முடியவில்லை. நபித்துவ வாதம் செய்யும் நபர் எங்கே என்று அன்னாரிடம் கேட்டோம். அது நான் தான் என்று அன்னார் கூறினார்கள். நாங்கள் கேட்டதற்கிணங்க எங்களுக்கு இஸ்லாத்தைக் குறித்து அன்னார் எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் ரிஃபாஆ (ரலி) அவர்கள் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வதற்காக சென்று விட்டார்கள். (அங்கு) துஆ செய்தார்கள். அதன் பிறகு கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரிஃபாஆ கூறுகிறார்கள்: ஒரு நாள் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தோம். அப்போது ஒரு காட்டரபி தொழுதுவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸலாத்திற்கு பதில் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், (அந்த நபரைப் பார்த்து) மீண்டும் தொழுவீராக என்று கூறினார்கள். அவர் தொழுதுவிட்டு திரும்ப வந்து ஸலாம் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம் மீண்டும் தொழுமாறு கூறினார்கள். இவ்வாறு இரண்டு மூன்று முறை நடந்தது. இறுதியில் அந்த நபர், எனக்கு தொழுகையைக் கற்றுக் கொடுங்கள் என்று கேட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் தொழுகைக்காக எண்ணம் கொண்டால், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப முதலில் உளூ செய்து கொள்ளுங்கள். பிறகு, உங்களுக்கு கொஞ்சம் குர்ஆன் மனனமாக தெரியும் என்றால் அதை ஓதுங்கள். பிறகு, நிதானமாக ருகூஃ செய்யுங்கள். அதன் பிறகு முற்றிலும் நேராக நில்லுங்கள். பிறகு மிகவும் மிதமான முறையில் ஸஜ்தா செய்யுங்கள். பிறகு, நிதானமாக அமருங்கள். பிறகு, ஸஜ்தா செய்யுங்கள். பிறகு, எழுங்கள். நீங்கள் இவ்வாறு செய்து விட்டால் உங்களுடைய தொழுகை முழுமை பெற்றுவிட்டது. நீங்கள் அதில் ஏதாவது குறைவு செய்தால் உங்கள் தொழுகையில் அதே அளவு குறைவை ஏற்படுத்திக் கொண்டீர்கள்."

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் உஸைது பின் மாலிக் பின் ரபீஆ (ரலி) அவர்களுடையதாகும்.** இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: அபூ உஸைது பின் மாலிக் பின் ரபீஆ (ரலி) அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அவர்களின் கடைசிக் காலத்தில் கண் பார்வை பறிபோன போது அவர்கள் கூறினார்கள்: இன்று நான் பத்ர் பகுதியில் இருந்திருந்தால், என்னுடைய பார்வையும் சரியாக இருந்திருந்தால், வானவர்கள் வெளிப்பட்ட அந்தப் பள்ளத்தாக்கை நான் உங்களுக்குக் காட்டியிருப்பேன். எனக்கு அதில் கொஞ்சம் கூட சந்தேகமோ, யூகமோ இல்லை!

ஹஸ்ரத் அபூ உஸைது பின் மாலிக் பின் ரபீஆ (ரலி) கூறுகிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது பனூ சல்மாவைச் சார்ந்த ஒரு நபர் வந்தார். தாய் தந்தையர் இறந்து விட்ட பிறகும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளக் கூடிய தேவை உள்ளதா என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஆம்! அவர்களுக்காக துஆ செய்யுங்கள்; இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்; அவர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்; அவர்களின் உறவினர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள்; அவர்களின் நண்பர்களுக்கு கண்ணியம் அளியுங்கள். இவ்வாறு அவர்களுக்கும் நற்கூலி கிடைத்து வரும். அவர்களின் பாவ மன்னிப்பிற்கான வழிவகை உருவாகிக் கொண்டே செல்லும்.”

உஸ்மான் பின் அர்(க்)கம் (ரலி) அவர்கள் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் (போர்) நாளன்று, உங்களிடம் உள்ள போர்ச் செல்வங்களை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். ஆகவே, ஹஸ்ரத் அபூ உஸைது ஸாயிதி அவர்கள் ஆயிஸுல் முர்ஸிபான் உடைய வாளை வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் அர்(க்)கம் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அந்த வாளைக் கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வாளை அவர்களுக்கு வழங்கி விட்டார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது (ரலி) அவர்களிடம் ஒரு கொடியைக் கொடுத்து பனூ அஸதை அழிப்பதற்காக 150 முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரைக் கொண்ட படைக்கு தளபதியாக அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் உஹது போரிலும் பத்ர் போரிலும் பங்கு பெற்றார்கள். உஹது போரில் புஜத்தில் ஏற்பட்ட ஒரு காயத்தின் காரணமாக ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டில் ஜமாதியுல் ஆகிர் 3 ஆம் நாளில் மரணமடைந்தார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபி அஸ்ஸுர்கி (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபி (ரலி) அவர்கள் அன்ஸாருடைய பனூ கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான அஜ்லானைச் சேர்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நபரை இரண்டு மூன்று முறை மீண்டும் தொழச் சொன்னார்களோ, மேலும், அவர் கேட்டதற்கிணங்க அவருக்குத் தொழுகை முறையைக் கற்றுக் கொடுத்தார்களோ அந்த நபர் ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபி (ரலி) அவர்களே ஆவார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களுடையதாகும்.** அகழ் போரின் போது அவர்கள் முழுமையான முறையில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப அந்த சந்தர்ப்பத்தின் போது, அபூ சுஃப்யான்

அவர்களையும் அவர்களின் சில முஷ்ரிக் தோழர்களையும் எதிர்கொண்டார்கள். (அகழை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த) அவர்களைத் திரும்பிச் செல்லும்படி கட்டாயத்திற்குள்ளாக்கி விட்டார்கள். அச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரத்தைப் பாதுகாப்பதற்கும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்கள் (இவ்வாறு) கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) மீது அல்லாஹ் கருணை புரிவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளில் அனைவரையும் விட அதிகமாக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்துடன் ஒட்டிப் பிணைந்திருந்தார்கள். எப்போதும் அதை பாதுகாத்து வந்தார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் ஹா(த்)திப் பின் அபீ பல்தஆ (ரலி) அவர்களுடையதாகும்.** அவர்களின் மரணம் 65 ஆம் வயதில் ஹிஜ்ரி 30 இல் மதீனாவில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அவர்களின் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள்.

யஃகூப் பின் உத்பா அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது; ஹஸ்ரத் ஹா(த்)திப் பின் அபீ பல்தஆ (ரலி) அவர்கள் தாம் மரணித்த நாளில் 4000 தீனார் மற்றும் திர்ஹம்களை விட்டுச் சென்றார்கள். ஒரு முறை அவர்களின் ஓர் அடிமை அவர்களைக் குறித்து முறையிடுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தான். ஹா(த்)திப் கண்டிப்பாக நரகத்தில் நுழைவார் என்று கூறினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: நீ பொய் கூறியுள்ளாய்! அவர் ஒரு போதும் அதில் நுழைய மாட்டார். ஏனெனில், அவர் பத்ர் போரிலும், ஹுதைபியா சமாதான ஒப்பந்தத்திலும் பங்கு பெற்றிருந்தார்.

*(குத்பாவின்) இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபிகளில் இன்னும் சிலருடைய குறிப்புகள் உள்ளன. அவற்றை பிற்காலத்தில் எடுத்துரைப்பேன் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**